**செ.வெ.எண்.160** **நாள் : 01.12.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம்**

------

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் இன்று (01.12.2016) ரிப்பன் மாளிகையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனையின்போது, தற்போது நடா புயல் உருவாகியுள்ளதை அடுத்து, சம்பந்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் தங்களது மண்டலங்களில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், மழையின் போது தேவைப்படும் உபகரணங்கள் குறித்தும், நிவாரண மையங்கள் மற்றும் சாலைப் போக்குவரத்து, சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றுதல், மழைநீர் தேங்காமல் இருக்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மழைக்காலங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் போக்குவரத்து காவல்துறை நடவடிக்கை மேற்கொள்ளவும், மின்வாரியத்தின் மூலம் மின்கசிவு மற்றும் மின்தடை போன்றவற்றினை சீர்செய்திடவும், அடையாற்றில் உள்ள 26 மின்பகிர்மானப் பெட்டிகளை உயரமான இடத்தில் வைத்திடவும், மருத்துவக்குழுவினர் மண்டலங்களில் தயார்நிலையில் இருக்கவும், நிவாரண முகாம்களில் தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், உணவு தயாரிக்கும் கூடங்கள், மர அறுவை இயந்திரங்கள், மீட்பு வாகனங்கள், ஜே.சி.பி., புல்டோசர், கிரேன் இயந்திரங்கள், தொற்றுநோய் பரவாமல் தடுத்திட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், துப்புரவு பணியாளர்களை தயார்நிலையில் வைத்திடவும், பொதுப்பணித்துறையால் தூர்வாரப்பட்ட கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களை தொடர்ந்து ஆய்வு செய்து கண்காணித்திடவும், கிண்டி தொழிற்பேட்டையில் சிப்காட்டுடன் இணைந்து குப்பைகள் தேங்காவண்ணம் தினமும் அப்புறப்படுத்திடவும், மீட்புப் பணிகளின் போது விரைந்து செயல்பட்டு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

ஆலோசனைக்குப்பின் தெரிவிக்கையில், தமிழக அரசின் உத்தரவின்படி, வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும்

கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக இந்திய ஆட்சிப் பணியாளர் நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் ஆய்வுக்கூட்டம் மற்றும் குடியிருப்போர் சங்கங்களுடன் ஆலோசனை மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்பட்டு மழைநீர் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட 35 இடங்களில் தற்போது திருவொற்றியூர் மண்டலம் கார்கில் நகர், மணலி மண்டலம் பர்மா நகர், திரு.வி.க. நகர் மண்டலம் 67வது வார்டு அலுவலகம், அம்பத்தூர் மண்டலம் இரயில் நகர், அண்ணாநகர் மண்டலம் சிட்கோ நகர், கோடம்பாக்கம் மண்டலம் ஜாபர்கான்பேட்டை, ஆலந்தூர் மண்டலம் ரிவர் வியூ காலனி, அடையாறு மண்டலம் சித்ரா நகர், பெருங்குடி மண்டலம் 43வது பகுதி அலுவலகம், சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகம் ஆகிய 10 இடங்களில் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்களால் தெரிவிக்கப்படும் மழை குறித்த புகார்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த 40 நபர்களுடன் 4 மிதவை மீட்பு படகுகள் அரக்கோணத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரவழைக்கப்பட்டு தேவை ஏற்படின் பயன்படுத்திட தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கடற்கரை மற்றும் நீர் செல்லும் பாதைகளில் இறங்க வேண்டாம் எனவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் வாயிலாக பெறப்படும் அதிகாரப்பூர்வமான செய்திகளை மட்டும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும், மின் ஒயர்கள், மின் பகிர்மானப் பெட்டிகள் போன்றவற்றின் அருகில் செல்ல வேண்டாம் எனவும், அச்சமோ, பயமோ கொள்ளாமல் பொதுமக்களுக்கு ஏதேனும் தேவைகள் ஏற்பட்டால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவிக்கலாம் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில், மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வடிகால் துறை, மின்சார வாரியம், போக்குவரத்து காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய பல்வேறு துறை உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**